**<u>நெல்லிக்குப்பம் நகராட்சி</u>**

**<u>நகர் மன்றக் கூட்டம் நிகழ்ச்சி நிரல்</u>**

2021–ம் ஆண்டு ஜனவரி மாதம் 27ம் தேதி (27.01.2021) புதன்கிழமை பகல் 5.00 மணிக்கு 1நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற உள்ள நகர் மன்றத்தின் சாதாரண கூட்டத்தில் முடிவு செய்யப்படவுள்ள மன்றப்பொருள்கள் விபரம்.

முன்னிலை : – திரு. சி.கிருபாகரன்
தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி

**<u>மன்றபொருள்.1.</u>** இந்நகராட்சியில் துப்புரவுப் பணியாளராக பணிபுரிந்து வந்த திரு. மு. சங்கர், என்பவர் 06.08.2020 அன்று இறந்துவிட்டார், அவரது ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதித் தொகை (SPF) மற்றும் அதற்கான வட்டி தொகையினை வழங்குமாறு அவரது மனைவியும் வாரிசுதாரருமான திருமதி. ச. ஜெயகலா க/பெ சங்கர் கோரியுள்ளார்.

அன்னாரின் விண்ணப்பம் உரிய பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில் கீழ்கண்டுள்ள விவரப்படி திரு. மு. சங்கர் (லேட்) , துப்புரவு பணியாளர் கணக்கில் உள்ள தொகை வழங்கப்பட வேண்டியுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | பணியில் சேர்ந்து 2000–2020 முதல் சிறப்பு சேமநலநிதி பிடித்தம் செய்யப்பட்ட நாள் | 01.04.2000 |
| 2 | இறந்த நாள் | 06.08.2020 |
| 3 | சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை பிடித்தம் செய்த தவணைகள் | 148 தவணைகள் |
| 4 | சிறப்பு சேமநல நிதி கடைசியாக பிடித்தம் செய்யப்பட்ட மாதம் | 31/07/2011 |
| 5 | சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை பிடித்தம் செய்த தொகை | ரூ.2960/- |
| 6 | 2000/2020 முடிய கணக்கிடப்பட்ட வட்டித்தொகை (கணக்கீட்டுத்தாள் இணைக்கப்பட்டுள்ளது) | ரூ.6882/- |
| 7 | நகராட்சி (அரசு) பங்குத் தொகை | இல்லை |
| | மொத்தம் | ரூ.9842/- |

எனவே மேற்கண்டுள்ள விபரப்படி, திரு. மு. சங்கர் (லேட்), துப்புரவு பணியாளர் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை ரூ. 2960/– ம் அதற்குண்டான வட்டித்தொகை ரூ. 6882/– ம் சேர்த்து மொத்தம் ரூ.9842 /– வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க. எண். 2343/2020/பி2**

**தீர்மான எண் . 1. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

<u>மன்றபொருள்.2.</u> இந்நகராட்சியில் துப்புரவுப் பணியாளராக பணிபுரிந்து வரும் திரு. வி.சௌந்தரராஜன், என்பவர் 31.10.2020 அன்று ஓய்வு பெற்றுள்ளார், அவரது ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதித் தொகை (SPF) மற்றும் அதற்கான வட்டி தொகையினை வழங்குமாறு கோரியுள்ளார்.

அன்னாரின் விண்ணப்பம் உரிய பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில் கீழ்கண்டுள்ள விவரப்படி திரு. வி.சௌந்தர்ராஜன், துப்புரவு பணியாளர் கணக்கில் உள்ள தொகையினை வழங்கப்பட வேண்டியுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | பணியில் சேர்ந்து 2001–2020 வரை சிறப்பு சேமநலநிதி பிடித்தம் செய்யப்பட்ட நாள் | 04.01.2001 |
| 2 | ஓய்வுபெற்ற நாள் | 31.10.2020 |
| 3 | சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை பிடித்தம் செய்த தவணைகள் | 148 தவணைகள் |
| 4 | சிறப்பு சேமநல நிதி கடைசியாக பிடித்தம் செய்யப்பட்ட மாதம் | 04/2013 |
| 5 | சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை பிடித்தம் செய்த தொகை | ரூ.2960/- |
| 6 | 2001 முதல் 2020 முடிய கணக்கிடப்பட்ட வட்டித்தொகை (கணக்கீட்டுத்தாள் இணைக்கப்பட்டுள்ளது) | ரூ.6428/- |
| 7 | நகராட்சி (அரசு) பங்குத் தொகை | ரூ .10000/– |
| | **மொத்தம்** | ரூ.19388/- |

எனவே மேற்கண்டுள்ள விபரப்படி திரு. வி.சௌந்தர்ராஜன், துப்புரவு பணியாளர் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை ரூ.2960/– ம் அதற்குண்டான வட்டித்தொகை ரூ. 6,428/– ம் நகராட்சி அரசு பங்கு தொகை ரூ. 10000/– சேர்த்து மொத்தம் ரூ.19,388/– வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க. எண். 2670/2020/பி2**

**தீர்மான எண் . 2. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள் . 3.** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியான வார்டு எண்:28, மேல்பாதி மற்றும் வார்டு எண் 15ல் வாழப்பட்டில் உள்ள 1.00 இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை தண்ணீர் தொட்டிகள் பழுதடைந்து அப்பகுதி பொது மக்களுக்காக தேவையான குடிநீர் வழங்க இயலவில்லை. ஏனவே பொது மக்கள் நலன் கருதியும், குடிநீர் விநியோக அவசியம் மற்றும் அவசியம் கருதி மேற்கண்ட பகுதியில் 1.00 இலட்சம் கொள்ளளவு கொண்ட இரண்டு மேல்நிலை தண்ணீர் தொட்டிகள் அமைக்க வேண்டியுள்ளது. இப்பணியினை உடன் மேற் கொள்ள வேண்டியுள்ளதாலும், குடிநீர் அத்தியாவசிய பணியின் முக்கியத்துவத்தினை கருத்தில் கொண்டு இப்பணி எடுத்து செய்வது மிகவும் அத்தியாவசியமாகிறது.

எனவே மேற்படி பணிகளின் அவசியத்தினை கருத்தில் கொண்டு அரசாணையின் படி (அரசாணை எண் (Ms). 368, நிதி துறை (SFC-MC).நாள் :07.10.2020 ) சிறப்பு திட்ட நிதியின் கீழ், பணிகளை மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்திட அரசின் நிர்வாக அனுமதி பெற கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| | வார்டு எண்– 28. மேல்பாதியில் 1.00 இலட்சம் கொள்ளளவு | |

| | | |
|---|---|---|
| 1 | கொண்ட மேல்நிலை தண்ணீர் தொட்டி அமைத்தல். | 33.00 |
| 2 | வார்டு எண்–15, வாழப்பட்டில் 1.00 இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை தண்ணீர் தொட்டி அமைத்தல். | 33.00 |
| | மொத்தம் | 66.00 |

அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் . /2021/இ)**

**தீர்மான எண் . 3. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள் . 4.** சிறப்பு சாலை திட்ட நிதி (SRP) 2020–21 ன் கீழ் நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு ரூ.200.00 இலட்சத்திற்கு (SRP Rs. 180.00 Lakhs, நகராட்சி பங்களிப்பு Rs.20.00 Lakhs வீதம் ) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது . நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல் முறை ந.க.எண். 20557/2018/இ3 நாள். 14.12. 2020ல் நிர்வாக அனுமதி மற்றும் நகராட்சி நிர்வாக தலைமை பொறியாளர், சென்னை அவர்களின் தொழில் நுட்ப அனுமதி செயல்முறை ந.க.எண். 23655/2020/DO1 நாள்.19.12.2019 ன் படி 12.01.2021 ல் ஒப்பந்தபுள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பட்டுள்ள ஒப்பந்தபுள்ளிகளை இறுதி செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | விஸ்வநாதபுரம் புதுநகர் புது தெரு 1 , விஸ்வநாதபுரம் தொட்டி தெரு , விஸ்வநாதபுரம் செட்டியார் தெரு , விஸ்வநாதபுரம் புதுநகர் புது தெரு 2 , அப்துல் கலாம் நகர் , அப்துல் ரஹமான் நகர் , SL நகர் , சிவசக்தி நகர் திருகண்டேஸ்வரம் , பல்ராம் நகர் , கல்கி நகர் , பாஸ்யம் நகர் , வள்ளலார் நகர் மற்றும் தந்தை பெரியார் தெரு விரிவாக்கம் சாலையில் தார் சாலை அமைத்தல் பணி , (வார்டு எண். 1,3,14,16, மற்றும் 24 ) | 200.00 | U.S. Assiciates , கடலூா். | **0.01%** மதிப்பீட்டை விட குறைவு |
| | | | M/s. JAI AND CO கடலூா் | **4.71%** மதிப்பீட்டை விட மிக அதிகம் |

அலுவலகக்குறிப்பு : – வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான **0.01 %** ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள . U.S. Assiciates , கடலூா். அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**(ந.க.எண் . 2823/2019/இ1)**

**தீர்மான எண் . 4. அலுவலக குறிப்பினை ஏற்று குறைந்த ஒப்பந்தபுள்ளியை அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள் . 5.** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பொது மக்களுக்கு 13 மேல் நிலை தண்ணிர் தொட்டி மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுகிறது . பாதுகாக்கப்பட்ட குடிநீரில் தொற்று நோய் பரவாமல் இருக்கும் வகையில் தேவையான திரவ குளோரின் தற்சமயம் இருப்பில்

இல்லை . எனவே குடிநீர் விநியோக அவசர அவசியம் கருதியும் , பொது மக்கள் நலன் கருதியும் திரவ குளோரின் வாங்குவதற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.1,00,000க்கு நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது

**<u>அலுவலக குறிப்பு:-</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் . 0339/2021/இ1)**

**தீர்மான எண் . 5. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள் . 6.** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட நகராட்சி அலுவலகத்தில் பணியாளர்கள் ஆண்கள் மற்றும் பெண்கள் என்று தனித்தனியே கழிவறை வசதியில்லாமல் உள்ளது . மேலும் நகராட்சியில் பணியாற்றும் அலுவலர்களில் 60% சதவீதம் பேர் மாற்று திறனாளிகளாக உள்ளனர் . இவர்கள் கழிவறை வசதியில்லாமல் மிகவும் சிரமப்படுகின்றனர் . எனவே அனைத்து பணியாளர்களின் கோரிக்கையை ஏற்று நகராட்சி அலுவலக வளாகத்தில் ஆண்கள் மற்றும் பெண்கள் என்று தனித்தனியே கழிவறை கட்டுவதற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.6,60,000க்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது

**<u>அலுவலக குறிப்பு:-</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் . 0340/2021/இ1)**

**தீர்மான எண் . 6. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள் . 7.** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள திருக்கண்டேஸ்வரம் நகராட்சி உயர் நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் அவர்கள் நகராட்சி பள்ளியில் கடந்த வடகிழக்கு பருவ மழையின் காரணமாக பள்ளி மாணவர்கள் அமரும் பெஞ்ச் மற்றும் டெஸ்க்குகள் 71 எண்ணிக்கையில் துரு படிந்துள்ளது . தற்சமயம் '' குரோனா வைரஸ் " தாக்குதல் காரணமாக பள்ளி விடுமுறை முடிந்து மீண்டும் திறப்பதால் மேற்படி பெஞ்ச் மற்றும் டெஸ்க் அனைத்திற்கும் வண்ணம் பூச்சு செய்து தருமாறு கோரியுள்ளதிற்கிணங்க பள்ளி மாணவ , மாணவிகள் நலன் கருதி வண்ணம் பூச தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.46,000க்கு நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது

**<u>அலுவலக குறிப்பு:-</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் . 0338/2021/இ1**

**தீர்மான எண் . 7. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள் . 8.** நெல்லிக்குப்பம் நகராட்சியில் "நிவர் புயல்" 2020 நிதியின் மன்ற தீர்மான எண். 190, நாள் 11.12.2020 ன்படி 20.01.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | நெல்லிக்குப்பம் நகராட்சி அண்ணா நகர் ஆண்கள் உயர் நிலைப்பள்ளியின் அருகே பழுதடைந்த மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலத்தை புதியதாக கட்டுதல் பணி . | 5.00 | 1. திருமதி . S.புவனேஸ்வரி | **0.01%** மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | 2 திருமதி . S.பரிமளா | **1.41%** மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

அலுவலகக்குறிப்பு :-1. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான 0.01 %
ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள திருமதி . S.புவனேஸ்வரி
ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்கலாம் .

**(ந.க.எண் . 3119/2020/இ1)**

**தீர்மான எண் . 8. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள் . 9.** நெல்லிக்குப்பம் நகராட்சி 5நகர மன்ற தீர்மான எண் . 285 நாள் 17.12.2013 ன் படி ஜெராக்ஸ் மிஷின் Canon Imagae Runner 2525 copier அரசு நிர்ணயித்த விலையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் M/s . Excite Inc , Puducherry ல் புதியதாக வாங்கப்பட்டது . மேற்காணும் ஜெராக்ஸ் மிஷினில் பழுது ஏற்பட்டதை தொடர்ந்து கீழ் கண்ட பொருள்களை புதியதாக மாற்ற செலவினம் ரூ.54,200ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

1.Canon NPG 51 Drum unit –1
2.Fixing film Assembly (FM 4–8446.000) –1
3.Roller Paper Pick up (FB6 –3405–000) – 1
4. Roller Paper Pick up (FC6 –6661–000) – 1
5. Roller Feed Separation (FC0 –5080–000) – 1
6. Roller Paper Pick up (FL3 –1352–000) – 1
7. Fixing Gear (FU8 –0576–000) – 1
8.Guide Paper Delivery Upper (FC9 –1556–000) – 1
9.Spring (FC5 –1368–000) – 1
10.Collar Fixing Delivery (FC5 –1358–000) – 1
11. Roller Pressure (FC7 –0242–000) – 1

அலுவலக குறிப்பு . மன்றம் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண் . 0337/2021/இ1)**

**தீர்மான எண் .9. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள் . 10.** நெல்லிக்குப்பம் நகராட்சி பொது சுகாதார பிரிவில் உள்ள TN – 31/ AH 6645 டாடா ஏசி என்ற வாகனத்திற்கு தகுதி சான்று பெறுவதற்கு உரிய அனைத்து பணிகளும் V.S.T கடலூர் என்ற நிறுவனம் மூலம் செய்யப்பட்டு வட்டார போக்குவரத்து அலவலகத்தில் செலுத்த வேண்டிய கீழ் கண்ட தொகை

| | | |
|---|---|---|
| 1. | வேக கட்டுபாட்டு கருவு பொருத்ததல் | – ரூ.4000/– |
| 2. | தகுதி சான்று பெறுவதற்கு உரிய கட்டணம் | – ரூ. 650/– |
| 3. | புகை பரிசோதனை கட்டணம் | – ரூ. 60/– |
| 4. | பசுமை வரி | – ரூ. 505/– |
| 5. | முன் பக்கம் , பின் பக்கம் ஸ்டிக்கர்ஸ் | – ரூ. 375/– |
| | | ரூ. 5590/– |

இத் தொகையினை திரு . கே. ராஜாராஜசோழன் , ஓட்டுனர் என்பவர் செலுத்தி உள்ளார் எனவே மேற்கண்ட தொகை ரூ. 5590/–ஓட்டுநருக்கு வழங்க மன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண் . 1768/2020/எச்1)**

**தீர்மான எண் . 10. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள் . 11.** அரசு ஆணை (நிலை) எண்.170 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ம.அதி.–3) துறை நாள் 27.10.2020ன் படி வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களில் வருவாய் ஈட்டுபவர்கள் (Bread Winner) மற்றும்

அவரால் பரிந்துரைக்கப்பட்டவர்கள் (Nominee) ஆகியொர்களுக்கு புரட்சித்தலைவி அம்மா விரிவான விபத்து மற்றும் ஆயுள் காபீட்டுத் திட்டத்தில் (Puratchi Thalaivi Amma Comprehensive Accident cum life Insurance Scheme ) பயன் பெறும் வகையில் செயல்பட உள்ளதால் ஏற்கனவே எடுக்கப்பட்ட வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களின் பட்டியலில் (BPL) வருவாய் ஈட்டுவபவர்கள் மற்றும் அவர்களால் பரிந்துரைக்கப்பட்டவர்கள் விவரம் இல்லாததால் மீளவும் கணக்கெடுப்பு மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் மேற்படி அரசாணையினை ஏற்று வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களின் கூடுதல் விவரங்களை சேகரிப்பதற்கு ஒரு குடும்பத்திற்கு ரூ.15 வீதம் செலவு என்ற அடிப்படையில் படிவம் அச்சடிப்பதற்கு ரூ. 5/– தகவர்களை சேகரிப்பதற்கு ரூ. 5.– தகவல்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்வதற்கு ரூ. 5/– என ஆக மொத்தம் ஒரு குடும்பத்திற்கு ரூ. 15/– செலவு செய்து கொள்ள அரசாணையில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. நமது நகராட்சியில் 5453 எண்ணிக்கையில் வறுமைக்கோட்டிற்கு கீழ் குடும்பங்கள் விவரங்கள் களப்பணி தகவல் சேகரித்து கணினியில் 21.11.2020 க்குள் பதிவேற்றம் செய்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, மேற்படி 5453 குடும்பங்களின் விவரங்கள் பிரிண்ட் செய்து கொடுக்க தமிழ்நாடு மல்டிபர்ஸ் இன்கோ சர்வ், திருச்சி நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்குவதற்கு அதற்கான தோரய செலவினம் .23,000/–க்கும் (இருபத்தி மூன்றாயிரம் மட்டும் ) மற்றும் களப்பணி செய்து படிவங்கள் பூர்த்தி செய்திடும் களப்பணியாளர்களுக்கு ஒரு படிவம் ஒன்றுக்கு ரூ. 5/–ம், அதனை கணினியில் பதிவேற்றம் செய்ய படிவம் ஒன்றுக்கு ரூ.5/–ம் ஆகும். மொத்த செலவினத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு :

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) தமிழக அரசின் அவசரம் அவசியம் கருதி ஆணையாளர் முன் அனுமதி பெற்று தமிழ்நாடு மல்டிபர்ஸ் இன்கோ சர்வ், திருச்சி நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.
3) படிவம் பூர்த்தி செய்திட களப்பணியாளர்களுக்கு படிவம் ஒன்றுக்கு ரூ..5/–கணினியில் பதிவேற்றம் செய்ய படிவம் ஒன்றுக்கு ரூ. 5/–ம் ஆக மொத்தம் ரூ.54530 வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.2762/2020/எச்2)

**தீர்மான எண் . 11. அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி